தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## "தேசிய நெடுஞ்சாலை போல் நதிநீர் சாலை அமைக்க வாய்ப்பு'

**சென்னை,**

தேசிய நெடுஞ்சாலை போல தேசிய நதிநீர் சாலையை அரசியலமைப்பு சட்டத்தின்படி உருவாக்கலாம் என மத்திய அரசின் நதிநீர் இணைப்பின் உயர்நிலைக் குழு உறுப்பினர் ஏ.சி.காமராஜ் தெரிவித்தார். சென்னையில் செய்தியாளர்களிடம் தேசிய நீர்வழிச் சாலை அமைப்பின் தலைவரும், மத்திய அரசின் நதிநீர் இணைப்பின் உயர்நிலைக்குழு உறுப்பினருமான பொறியாளர் ஏ.சி.காமராஜ் சனிக்கிழமை கூறியதாவது:

நவீன நீர்வழிச் சாலை திட்டத்திற்கு நதிகளை தேசிய மயமாக்கத் தேவையில்லை. அரசியலமைப்பு சட்டத்தின் 246 பிரிவின்படி, தேசிய நெடுஞ்சாலை உருவானது போல், தேசிய நீர்வழிச் சாலையை உருவாக்கலாம். அரசு மற்றும் தனியார் இணைந்து, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் அரசுக்கு நிதிச்சுமை பெருமளவு குறையும். நாட்டின் பொருளாதாரம் மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாகும்.

இதன் மூலம் 15 கோடி ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெறுவதால், விவசாயிகள் வாழ்வு வளமாவதுடன், ஆண்டு முழுவதும் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படாது. இது தவிர, சுமார் 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரமும் இந்தத் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்ய முடியும். மேலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால், நீரை ஏற்றி இறைக்கச் செலவழிக்கும் 40 ஆயிரம் மெகாவாட் மின்சாரமும் மிச்சமாகும். நவீன நீர்வழிச் சாலை திட்டத்தால் 18 கோடி பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றார் ஏ.சி.காமராஜ். பொதுப்பணித் துறையின் ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் தங்கையா, தேசிய நீர்வழி சாலை அமைப்பின் தலைமை பொறியாளர் பாபு மகாதேவன் உள்ளிட்டோர் செய்தியாளர்கள் சந்திப்பின் போது உடனிருந்தனர்.

**தேனி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை:பொதுமக்கள் மகிழ்ச்சி**

**ஆண்டிப்பட்டி,**

தேனி மாவட்டத்தின் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தததது இந்நிலையில் திங்கட்கிழமை மாலை பெய்த மழையால் வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த பருவமழையின் போது போதுமான அளவு மழை பெய்யாததால் கண்மாய் மற்றும் குளங்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு விட்டது, நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. இதனால் கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மட்டம் வற்றி விட்டது.மேலும் தேனி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் குடிநீர் பிரச்சினை தலைவிரித்து ஆடுகிறது.சில இடங்களில் குடிநீர் பிரச்சினையால் வேட்பாளர்களை பொதுமக்கள் முற்றுகையிடும் நிகழ்வுகள் நடந்து வருகிறது.

இந்நிலையில் திங்கட்கிழமை பகலில் வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்தது.ஆனால் மாலையில் பெரியகுளம் பகுதியில் தீடீரென்று பலத்த காற்று வீசியது அதன் பின் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது இது 1 மணி நேரத்திற்கு மேலாக நீடித்தது.அதே போல் தேனி மற்றும் க.விலக்கு பகுதியில் சாரல் மழை பெய்துள்ளது இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் இதே போல் தொடர்ந்து மழை பெய்தால் தேனி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குளம்,குட்டைகளில் நீர் வரத்து ஏற்பட்டு நீர் மட்டம் உயரும், குடிநீர் பிரச்சினை தீரும்.இல்லையேல் குடிநீர் தட்டுப்பாடு தொடரும் நிலை ஏற்படும்.

**கொடைக்கானலில் மழை**

**கொடைக்கானல்,**

கொடைக்கானலில் கடந்த சில மாதங்களாக தொடர்ந்து நிலவி வந்த வெயிலால் அதிக வெப்பம் இருந்து வந்தது. இந் நிலையில் திங்கள்கிழமை மாலை 30 நிமிடம் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் வெப்பம் சற்று குறைந்து குளுமையான சீதோஷண நிலை உருவாகியுள்ளது. கடந்த இரண்டு நாள்களாக அவ்வப்போது

பெய்த மழையின் காரணமாக நீரோடைகளில் சற்று நீர்வரத்து காணப்படுவதுடன் விவசாயம் செய்வதற்கும் பயனுள்ளதாக உள்ளது.

### களியக்காவிளையில் பலத்த மழை

**கன்னியாகுமரி,**

களியக்காவிளை சுற்றுவட்டாரப் பகுதியில் திங்கள்கிழமை பகலில் பலத்த மழை பெய்தது. இப்பகுதியில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பகலிலும், இரவிலும் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது.

இந்த நிலையில் திங்கள்கிழமை பகலில் வெயிலின் தாக்கம் குறைந்து வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. மதியம் திடீரென வானில் மழை மேகம் சூழ்ந்து பலத்த மழை கொட்டியது. மதியம் 1.40 மணிக்கு துவங்கிய மழை 20 நிமிடங்களுக்கும் மேலாக பெய்தது. தொடர்ந்து சாரல் மழை பெய்துகொண்டிருந்தது. பிற்பகலிலும் வானம் மேகமூட்டமாக காணப்பட்டது. களியக்காவிளை, கோழிவிளை, படந்தாலுமூடு சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் மழை பெய்தது. இப்பகுதியில் திடீரென பெய்த மழையால் கோடை வெப்பம் குறைந்து குளிர்ச்சி நிலவியது.

### தேனி மாவட்டத்தில் சாரல் மழை

**ஆண்டிபட்டி,**

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை மாலை பெய்த மழையால் வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த முறை போதுமான அளவு பருவ மழை பெய்யாததால் கண்மாய் மற்றும் குளங்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. எனவே கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மட்டம் வற்றி விட்டது. மேலும் தேனி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் குடிநீர் பிரச்னை தலைவிரித்து ஆடுகிறது. சில

இடங்களில் குடிநீர் பிரச்னையால் வேட்பாளர்களை பொதுமக்கள் முற்றுகையிடுவதும் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திங்கள்கிழமை பகலில் வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. ஆனால் மாலையில் பெரியகுளம் பகுதியில் திடீரென்று பலத்த காற்று வீசியது. தொடர்ந்து இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. சுமார் 1 மணி நேரத்துக்கும் மேல் இந்த மழை நீடித்தது.

அதே போல் தேனி மற்றும் க. விலக்கு பகுதிகளில் சாரல் மழை பெய்துள்ளது. இந்த திடீர் மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் இதே போல் தொடர்ந்து மழை பெய்தால் தேனி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான குளம், குட்டைகளில் நீர் வரத்து அதிகரித்து நீர் மட்டம் உயரும். குடிநீர் பிரச்னையும் தீரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 49.81 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 49.81 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 252 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 4.3 டி.எம்.சி.

## கோடை  வெயிலால் பழங்களின் விலை உயர்வு

**ராஜபாளையம்,**

ராஜபாளையம் பகுதியில் கொளுத்தும் கோடை வெயிலுக்கு பழங்கள் விற்பனை அதிகரித்து வருகிறது. பழங்களின் விலையும் உயர்ந்துள்ளது.

தற்போது ராஜபாளையம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கோடைவெயில் வாட்டிஎடுத்து வருகிறது. காலை 8 மணிக்கே சுட்டெரிக்கத்துவங்கும் வெயில் மாலை 5 மணிவரை தணிவதில்லை. வெயிலின் தாக்கத்தால் இரவு கடுமையான புழுக்கம் நிலவுகிறது. கோடை வெயிலின் வெப்பத்தைத் தணிக்க மக்கள் பழங்கள்,

குளிர்பானங்களை அதிகம் நாடுகின்றனர். இதனால் பழங்களின் விலை அதிகரித்துள்ளது. கிலோ ரூ. 40க்கு விற்ற கருப்பு நாட்டு திராட்சை ரூ. 60ஆக உயர்ந்துள்ளது. பச்சை பன்னீர் திராட்சை கிலோ ரூ. 90 ஆகவும், விதையில்லா கருப்பு பெங்களூரு திராட்சை கிலோ ரூ. 110ஆகவும் அதிகரித்துள்ளது. ஆப்பிள், ஆரஞ்சு, சாத்துக்குடி மாதுளை, உள்பட அபினைத்து பழங்களும் கிலோ ரூ. 20 முதல் ரூ. 30 வரை அதிகரித்துள்ளது. ராஜபாளையம் பகுதியில் விளையும் கொய்யாபழம் கிலோ ரூ. 40ஆகவும் சப்போட்டா பழம் கிலோ ரூ. 30 ஆகவும் விலை அதிகரித்துள்ளது.

**சூறாவளியால் வாழைமரங்கள் சேதம்**

**சிவகாசி,**

திருத்தங்கல் மற்றும் செங்கமலநாச்சியாபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை வீசிய சூறாவளிகாற்றால் சுமார் 30 ஆயிரம் வாழைமரங்கள் சாய்தன.

திருத்தங்கல் மற்றும் செங்கமலநாச்சியார்புரம் பகுதியில் சுமார் 100 ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. இன்னும் சில நாள்களில் காய் வெட்டும் பருவம் வந்துவிடும். இந்நிலையில் அப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை சூறாவளிகாற்று வீசியது. இதில் சுமார் 30ஆயிரம் வாழைமரங்கள் சாய்ந்துவிட்டன.

செங்கமலநாச்சியார்புரம் குமார், வாசுதேவன், சீனிவாசகம், முருகன், நாராயணமூர்த்தி உள்ளிட்ட விவசாயிகளின் வாழைமரங்கள் சாய்ந்தன. அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரியுள்ளனர்.

**சோலையார் அணையின் நீர்மட்டம் குறைவு**

**வால்பாறை,**

மழை இல்லாததால், சோலையார் அணையின் நீர்மட்டம் 2.57 அடியாகக் குறைந்தது. வால்பாறை பகுதியில் சில மாதங்களாகவே மழை பெய்யாத காரணத்தால் வறட்சி நிலவுகிறது. ஆறுகளில் தண்ணீர் இல்லாததால், கீழ்ப்பகுதி விவசாயிகளின் உயிர்நாடியாக விளங்கக் கூடிய சோலையார் அணையும்

வறண்டுவிட்டது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி நீர்மட்டம் 2.57 அடியாக உள்ளது. இதனால் கேரள மாநிலம் எல்லைப் பகுதியில் உள்ள சோலையார் மின்நிலையம், மானாம்பள்ளி எஸ்டேட் பகுதியில் உள்ள மின்நிலையத்தில் ஒரு மாதமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு, ஞாயிற்றுக்கிழமை சோலையார் அணைப் பகுதியில் 6 மி.மி. மழை பெய்தது. இதனால் அணைக்கு விநாடிக்கு 175.35 கனஅடி வருகிறது. அதே சமயம், அணையில் இருந்து, 170.37 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. மழை தொடர்ந்து பெய்தால் மட்டுமே அணையின் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**சேவூரில் ரூ. 10 லட்சம் நிலக்கடலை ஏலம்**

**அவிநாசி,**

சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற நிலக்கடலை ஏலத்தில், ரூ. 10 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்திற்கு, 700 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. சென்ற வாரத்தை விட 200 மூட்டைகள் அதிகமாக வந்திருந்தன. குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக (காய்ந்த) நிலக்கடலை ரூ. 4,000 முதல் ரூ. 4,190 வரையிலும், இரண்டாவது ரக நிலக்கடலை, ரூ. 3,750 முதல் ரூ. 3,970 வரையிலும் ஏலம் போனது.

மூன்றாவது ரக பச்சை நிலக்கடலை ரூ. 2,900 முதல் ரூ. 3,300 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 10 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 10 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம்,ராமியம்பாளையம்,அன்னூர், மங்கரசுவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 110 விவசாயிகளும் ஏலத்தில் பங்கேற்றனர்.சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் (பொறுப்பு) கூறுகையில், சென்ற வாரத்தை விட 200 மூட்டைகள் வரத்து அதிகரித்ததுடன், குவிண்டாலுக்கு ரூ. 250 வரை விலையும் அதிகரித்திருந்தது என்றார்.

**கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை வீழ்ச்சி**

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68 ஆக இருந்தது. கோழி இறைச்சி விற்பனைக் குறைவால் திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 63 ஆக விலையை குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 2.42, சென்னையில் ரூ. 2.75.

**ரூ. 4.30 லட்சம் நிலக்கடலை ஏலம்**

**வெள்ளக்கோவில்,**

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை ரூ. 4 லட்சத்து 31 ஆயிரத்துக்கு நிலக்கடலை ஏல விற்பனை நடைபெற்றது.

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை நடக்கும் நிலக்கடலை ஏல விற்பனை வரத்து இல்லாததால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது வரத்து அதிகரித்து வருவதால் கடந்த இரண்டு வாரங்களாக ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வார ஏலத்துக்கு, திருப்பூர், கரூர், ஈரோடு மாவட்டப் பகுதிகளிலிருந்து விவசாயிகள் 284 நிலக்கடலை மூட்டைகளை விற்பனைக்காகக் கொண்டு வந்திருந்தனர். மொத்தம் 9 ஆயிரத்து 815 கிலோ நிலக்கடலை, ரூ. 4 லட்சத்து 31 ஆயிரத்து 720-க்கு விற்பனையானது. அதிக பட்ச விலை கிலோ ரூ. 45.30, குறைந்த பட்ச விலை ரூ. 40.39-க்கும் ஏலம் போனது.

ஏலத்தில், வெள்ளக்கோவில், சிவகிரி, முத்தூர், தாராபுரம் பகுதிகளை சேர்ந்த எண்ணெய் ஆலை உரிமையாளர்கள் பங்கேற்றனர். வரும் வாரங்களில் விலையும்,

வரத்தும் சீராகவே இருக்குமென விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**கோடை வெயிலால் 10 சதம் வரை முட்டை உற்பத்தி சரிவு**

**நாமக்கல்,**

கோடை வெயில் காரணமாக நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி 7 முதல் 10 சதம் வரை சரிந்துள்ளது. இதனால், முட்டைக் கொள்முதல் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது என்று, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தெரிவித்துள்ளது. சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய நாமக்கல் மண்டலத்தில் கடந்த மார்ச் 1-ஆம் தேதி ரூ.3.45ஆக இருந்த முட்டைக் கொள்முதல் விலை படிப்படியாகச் சரிந்து, கடந்த வாரம் ரூ.2.40ஆக நிர்ணயிக்கப்பட்டது. சந்தை நிலவரத்தை கவனிக்கையில் முட்டைக் கொள்முதல் விலை மேலும் சரியக்கூடும் என்ற அச்சம் பண்ணையாளர்களிடையே நிலவியது.

இந்த நிலையில், முட்டைக் கொள்முதல் விலையில் திங்கள்கிழமை 2 காசுகள் உயர்ந்து, ரூ.2.42 ஆக நிர்ணயிக்கப்பட்டது. ராமநவமி செவ்வாய்க்கிழமை முடிவதை அடுத்து, வட மாநிலங்களில் விலை உயரத் தொடங்கியிருப்பதன் காரணமாக, நாமக்கல் மண்டலத்திலும் முட்டைக் கொள்முதல் விலை 2 காசுகள் உயர்த்தப்பட்டிருப்பதாகவும், வரும் நாள்களில் இந்த விலை மேலும் அதிகரிக்கும் என்றும் நாமக்கல் மண்டல என்இசிசி தெரிவித்தது.

இதுகுறித்து அதன் தலைவர் பொ.செல்வராஜ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது: வட மாநில மண்டலங்களான பர்வாலா, தில்லி, கொல்கத்தா உள்ளிட்டவற்றில் ராமநவமி முடிவதையொட்டி, முட்டை நுகர்வு சீராகி முட்டைக் கொள்முதல் விலையும் உயர்ந்து வருகிறது. இதற்கிடையே, கோடை வெயில் காரணமாக, நாமக்கல் மண்டல முட்டை உற்பத்தி 7 முதல் 10 சதம் வரை குறைந்துள்ளது. தவிர, காய்கறிகள் விலையேற்றத்தால் முட்டை நுகர்வும் அதிகரித்து வருகிறது. இதன்படி, நுகர்வு அதிகரிக்கும் நிலையில், உற்பத்தி குறைந்து வருவது முட்டைக் கொள்முதல் விலை வரும் நாள்களில் மேலும் உயரக் கூடும். அத்துடன், ஏப்ரல் 15 முதல் மே 30ஆம் தேதி வரை கிழக்குக் கடற்கரைப்

பகுதியில் மீன்பிடித் தடைக் காலம் அமல்படுத்தப்பட உள்ளதால், முட்டை நுகர்வு மேலும் அதிகரிக்கக் கூடும். எனவே, இனிவரும் நாள்களில் முட்டை விலை பெருமளவில் உயர வாய்ப்புள்ளது என்பதால், பண்ணையாளர்கள் சந்தை நிலவரத்தை உணராமல் அவசரப்பட்டு முட்டைகளை குறைத்து விற்காமல் என்இசிசி அறிவிக்கும் விலைக்கே விற்க வேண்டும். வியாபாரிகளும் சூழ்நிலைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி, பண்ணையாளர்களை நசுக்குவதைக் கைவிட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒசூரில் ரோஜா விலை வீழ்ச்சி; கொத்தமல்லி விலை அதிகரிப்பு

**ஒசூர்,**

ஒசூரில் ரோஜா மலர்களின் விலை கடும் வீழ்ச்சியால், செடிகளில் இருந்து பறிக்காமல் அப்படியே விடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒசூர் சுற்றுப் பகுதியில் மண் வளம், தட்பவெப்ப நிலை காரணமாக இங்கு காய்கறிகள், மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக ஒசூர் சுற்றுப் பகுதியில் விளையும் ரோஜா மலர்களுக்கு வெளியூர், வெளிநாடுகளில் அமோக வரவேற்பு உள்ளது. குறிப்பாக காதலர் தினம், கிறிஸ்துமஸ், புத்தாண்டு காலங்களில் இங்கிருந்து பல கோடி ரூபாய் மதிப்பில் ரோஜா மலர்கள் ஏற்றுமதியாகின்றன. தாஜ்மகால், கிரான்ட்காலான், பர்ஸ்ட் ரெட், நோப்ளஸ் உள்ளிட்ட 45 வகையாக ரோஜா மலர்கள் இந்தப் பகுதியில் சாகுபடி செய்யப்படுகின்றன.

கடந்த மாதம் வரை ரோஜா மலர்களின் விலை ஏறுமுகமாக இருந்தது. தற்போது திடீரென விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு காதலர் தினத்தையொட்டி ஒரு ரோஜாமலர் ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால், தற்போது ஒரு ரோஜா ரூ.1-க்கு கூட விற்பனையாகாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், செடிகளில் இருந்து ரோஜா மலர்களைப் பறிக்காமல் விவசாயிகள் அப்படியே விட்டுள்ளனர். சில விவசாயிகள் மலர்களைப் பறித்து சாலையோரம் கொட்டுகின்றனர். இதுகுறித்து விவசாயி சர்வேஷ் ரெட்டி கூறியது:

இதுவரை இல்லாத அளவுக்கு தற்போது ரோஜா மலர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், மலர்கள் அதிகளவு

உற்பத்தியாகின்றன. முன்பு நல்ல விலை கிடைத்ததால், மலர்களைப் பறித்து விற்பனை செய்தோம். தற்போது விலை வீழ்ச்சியால், பறிக்கும் கூலி, பராமரிப்பதற்கு கூட கட்டுபடியாகாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார். கொத்தமல்லி விலை ஏற்றம்: சூளகிரி, கெலமங்கலம் ராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை பேரிகை உள்ளிட்ட சுற்றுப் பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் எப்போதும், கொத்தமல்லியை விவசாயிகள் சாகுபடி செய்தனர். நிகழாண்டில், போதிய மழையில்லாமல் கடுமை வறட்சி ஏற்பட்டதால், கொத்தமல்லியை விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்யவில்லை. ஆழ்துளைக் கிணறு மூலம் சாகுபடி செய்யும் விவசாயிகள் மட்டுமே பயிரிட்டனர். இதனால், உற்பத்தி குறைந்ததால், விலை உயர்ந்து வருகிறது. கடந்த மாதம் வரை கொத்தமல்லி ஒரு கட்டு ரூ.1-க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு கட்டு ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை விற்பனையில் மேலும் கூடுதலாக விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லி பயிர் செய்த விவசாயிகள் விலை ஏற்றத்தால் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே வேளையில் ரோஜா சாகுபடி செய்த விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வைகை அணை நீர்மட்டம் குறைந்தது**




**ஆண்டிபட்டி**: வைகை அணையில் இருப்பில் உள்ள நீர், தொடர்ந்து குடிநீருக்கு பயன்படுத்தப்படுவதால், நீர் மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது

வெயிலின் தாக்கமும் அதிகரித்து வருவதால், ஆவியாகும் நீரின் அளவு அதிகரித்து, அணையின் நீர் மட்டம் வேகமாக குறைகிறது. இருப்பில் உள்ள நீரை, இன்னும் சில நாட்கள் மட்டுமே குடிநீருக்கு பயன்படுத்தும் நிலை உள்ளது. அணையில் மண் படிமானம் அதிகம் இருப்பதால், 20 அடிக்கு கீழ் உள்ள நீரை பயன்படுத்த முடியாது. நேற்று மாலை அணை நீர் மட்டம் 28.05 அடியாக இருந்தது. அணைக்கான நீர் வரத்து நின்று, பல நாட்களாகி விட்டது. மதுரை, சேடபட்டி-ஆண்டிபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 40 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த 12 நாட்களில், நீர் மட்டம் 2 அடி குறைந்துள்ளது. நேற்று மாலை 110.10 அடியாக பெரியாறு அணை நீர் மட்டம் இருந்தது. அணைக்கான நீர் வரத்து வினாடிக்கு 100 கன அடியாகவும், குடிநீர் தேவைக்கு நீர் திறப்பு, 100 கன அடியும் உள்ளது. அணையில் திறக்கப்பட்டுள்ள 100 கன அடி நீரும், வைகை அணைக்கு வரும் முன்பே வற்றி விடுவதால், குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது.

### பரமத்தியில் 43 டிகிரி செல்சியஸ் : தென் தமிழகத்தில் மழை

**சென்னை**: கரூர் மாவட்டம், பரமத்தி, திருப்பத்தூர் உள்ளிட்ட வட தமிழகத்தின் சில பகுதிகளில், அதிகளவு வெப்பம் பதிவாகியுள்ளது. கடந்த, 10 நாட்களாக, திருத்தணி, திருப்பத்தூர், வேலூர் பகுதிகளில், 40 டிகிரி செல்சியசிற்கும் அதிகமாக வெப்பம் பதிவாகியது. எனினும், கடந்த சில தினங்களாக சற்றே, வெப்பம் குறைந்தது.

வெப்பம் குறைகிறது : தற்போது மீண்டும், வெப்பநிலை உயரத் துவங்கியுள்ளது. தென் தமிழகத்தின் சில பகுதிகளில் மழை பெய்து வருவதால், அப்பகுதிகளை பொறுத்தவரை வெப்பம் குறைந்து காணப்படுகிறது. ஆனால், வட தமிழகத்தில் சென்னை தவிர, பல பகுதிகளில் வெப்பம் வாட்டி எடுத்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, கரூர் மாவட்டம், பரமத்தியில், அதிகபட்சமாக, 43 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது.

அடுத்ததாக, திருப்பத்தூரில், 41, வேலூர், திருத்தணி, திருச்சி, சேலம், தர்மபுரியில், 39 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவாகி உள்ளது. சென்னையில், அதிகபட்சம், 35, குறைந்தபட்சம், 27 டிகிரி செல்சியஸ் வெப்பம் என இயல்பளவாகவே பதிவாகியுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை, வானிலை ஆய்வு மைய

கணக்கீட்டின்படி பதிவாகும் வெப்பத்தை விட, உணரப்படும் வெப்பம் அதிகளவில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேகமூட்டம் இருக்கும் : வட தமிழகத்தில் வெயில் வாட்டி எடுக்க, தென் தமிழகத்தில் ஆங்காங்கே சில இடங்களில் மழை பெய்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளத்தில், 2 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. மேலும், இரு தினங்களுக்கு தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை, அதிகபட்சம், 35, குறைந்தபட்சம், 27 டிகிரி செல்சியசை ஒட்டி இருக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீரமைக்கப்படுமா ! : மேமாத்தூர் அணைக்கட்டு பாசன வாய்க்கால்... : 4,620 ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும்

**விருத்தாசலம்**: மேமாத்தூர் அணைக்காட்டு பாசன வாய்க்கால்களை தூர்வாரி, ஏரிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பாசன வசதியை மேம்படுத்த பொதுப் பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். விருத்தாசலத்திலிருந்து மேற்கே 9 கி.மீ., தொலைவில் மணிமுக்தாற்றின் குறுக்கே 1870ம் ஆண்டு மேமாத்தூர் அணை கட்டப்பட்டது. இந்த அணையிலிருந்து, 12.1 கி.மீ., நீளமுள்ள பாசன வாய்கால்கள் மூலம் கொடுக்கூர் பெரிய ஏரி, கொடுக்கூர் சித்தேரி, விருத்தாசலம் பிள்ளைத் தாங்கல் ஏரி, ராமசாமி உடையன்தாங்கல் ஏரி, பெரம்பலூர் ஏரி, பரவளூர் ஏரி, தொரவளூர் ஏரி, மணவாளநல்லூர் ஏரி, சாத்துக்கூடல் ஏரி, கோமங்கலம் ஏரி, முகுந்தநல்லூர் ஏரி, ஆலிச்சிக்குடி ஏரி, இளமங்கலம் ஏரி உள்ளிட்ட 15 ஏரிகள் நிரம்பும். இந்த ஏரிகளின் பாசனம் மூலம் பரவளூர், தொரவளூர், கொடுக்கூர், சாத்துக்கூடல், முகுந்தநல்லூர், ஆலிச்சிக்குடி உட்பட 18 கிராமங்களில் 4,620 ஏக்கர் விளை நிலங்களில் சம்பா, நவரை, குறுவை பட்டங்களில் நெல் சாகுபடி செய்யப்பட்டன. மேமாத்தூர் அணைக்கட்டின் கரைகள், ஷெட்டர்கள், பாசன வாய்க்கால்கள் பழுதடைந்ததால், தண்ணீர் வெளியேறி வீணாவதால் ஏரிகளுக்கு நீர்வரத்து குறைந்தது. இதனால், மூன்று பட்டங்களில் நடவு செய்த நெல் சாகுபடி குறைந்து, மானாவாரியில் உளுந்து, மரவள்ளி, மக்காச்சோளம், எள், வேர்க்கடலை

பயிர் செய்யப்பட்டன. கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய பருவமழை பெய்யாததால் மானாவாரி சாகுபடியும் குறைந்ததையடுத்து, அணைக்கட்டு மற்றும் பாசன வாய்க்கால்களை சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.அதைத் தொடர்ந்து கடந்த 2012 ஆண்டு 14 கோடி ரூபாய் செலவில் அணைக்கட்டு புனரமைக்கப்பட்டு, கடந்தாண்டு 4 லட்சம் ரூபாய் செலவில் கொடுக்கூர் ரெகுலேட்டர் மற்றும் ஒரு கி.மீ., பாசன வாய்க்கால் சீரமைக்கப்பட்டது.

விளாங்காட்டூர், கோமங்கலம், ஆலிச்சிக்குடி, பரவளூர், உள்ளிட்ட பகுதிகளில் பாசன வாய்க்கால்களில் கோரை புற்கள், முட்செடிகள் அதிகளவில் மண்டியுள்ளன. மேலும், பொதுப்பணித்துறை பராமரிப்பிலுள்ள விருத்தாசலம், பெரம்பலூர், மணவாளநல்லூர், கோமங்கலம், விருத்தாசலம் கஸ்பா உள்ளிட்ட ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் பருவமழையின்போது, குறைந்த அளவே ஏரிகள் நிரம்பி, அடுத்த ஓரிரு மாதங்களில் வறண்டு விடுவதால், விவசாயிகள் பயிர் செய்ய முடியாமல் அவதியடைகின்றனர். எனவே, மேமாத்தூர் அணைக்காட்டு பாசன வாய்க்கால்களை தூர்வாரி, ஏரிகளின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, பாசன வசதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சங்கராபுரம் பகுதி விவசாயிகள் காய்கறி சாகுபடியில் அதிக ஆர்வம்

**சங்கராபுரம்**: சங்கராபுரம் பகுதி விவசாயிகள் காய்கறி சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் பகுதியில் போதிய தண்ணீர் வசதி இல்லாததால் இப்பகுதி விவசாயிகள் ஏரி மற்றும் கிணற்று பாசனம் மூலம் நெல், வேர்க்கடலை போன்ற பயிர்களை பயிரிட்டு வந்தனர். சமீப காலமாக சங்கராபுரம் பகுதியில் பருவ மழை பொய்த்து ஏரிகள் வறண்டு கிடப்பதால், இப் பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் மற்றும் செங்கல் சூளை தொழில் ஆகியவற்றால் விவசாய வேலைக்கு ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் நெல் பயிரிடுவதை தவிர்த்து காய்கறி சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தாண்டு நெடுமானூர் காட்டு கொட்டாய், பொய்குணம், சோழம்பட்டு, அரசம்பட்டு, லக்கினாயக்கன்பட்டி, வட செட்டியந்தல் உள்ளிட்ட பகுதிகளில் வெண்டை, கத்தரி, புடலை, மிளகாய், பாகற்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. குடும்ப உறுப்பினர்களை கொண்டு காய்கறிகளை

அறுவடை செய்து சங்கராபுரம், அத்தியூர், மூரார்பாளையம், அரசம்பட்டு, பாண்டலம், சோழம்பட்டு, மேல்சிறுவளூர், மூங்கில்துறைபட்டு ஆகிய கிராமங்களில் நடக்கும் வாரச்சந்தையில் விற்பனை செய்கின்றனர்.

## களைக்கொல்லியிலிருந்து பயிர்களை காத்திட பிளாஸ்டிக் கவரை பயன்படுத்தும் விவசாயிகள்

**கச்சிராயபாளையம்**: எடுத்தவாய்நத்தம் கிராமத்தில் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பயிர்களை பிளாஸ்டிக் கவர் கொண்டு மூடி களைக்கொல்லி மருந்து தெளிக்கும் புது உக்தியை விசாயிகள் கையாளுகின்றனர்.

கச்சிராயபாளையம் பகுதி மக்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்டுள்ளனர். தற்போது விவசாய வேலைகளுக்கு ஆட்கள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. மேலும் ஆட்களின் கூலியும் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் வயல்களில் உள்ள களைகளை கட்டுப்படுத்த ரசாயன மருந்துகளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மரவள்ளி சாகுபடியில் ரசாயன களைக்கொல்லிகளை பயன்படுத்துவதால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால் விசாயிகள் பல புதிய வழிமுறைகளை கையாளுகின்றனர். பிளாஸ்டிக் மூடியை கொண்டு பயிர்களை மூடி பின்னர் களைக்கொல்லி பயன்படுத்தி வந்தனர். பிளாஸ்டிக் மூடிகளின் விலை அதிகம் என்பதால் சொந்தமாக வாங்காமல் ஒரு மூடிக்கு 50 பைசா வாடகை கொடுத்து பயன்படுத்தி வந்தனர். தற்போது விவசாயிகள் குறைந்த செலவில் பிளாஸ்டிக் கவர்களை கொண்டு மரவள்ளி செடிகளை மூடி ரசாயன மருந்துகளை பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் பணம் மிச்சமாவதுடன் அதே கவர்களை இரண்டு, மூன்று ஆண்டுகள் வரை பயன்படுத்த முடியும் என்கின்றனர். 150 ரூபாய்க்கு 1 கிலோ பிளாஸ்டிக் கவர்கள் வாங்கினால் போதுமானதாக இருப்பதால் இந்த முறை விவசாயிகளிடையே பெறுத்த வரவேற்பை பெற்றுள்ளது.

## இயந்திரம் மூலம் கரும்பு வெட்டும் பணி தீவிரம்

**ரிஷிவந்தியம்**: சூளாங்குறிச்சி கிராமத்தில் இயந்திரம் மூலம் கரும்பு வெட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ரிஷிவந்தியம் பகுதியில் கரும்பு விளைச்சல்

அதிகமாக உள்ளது. விளைச்சல் முடிந்ததும் ஒரு டன் கரும்பு வெட்ட தொழிலாளர்கள் குறிப்பிட்ட விலை பேசி அல்லது ஒரு டன் கரும்பு வெட்ட ஆண்களுக்கு 350 ரூபாய் எனவும் பெண்களுக்கு 150ரூபாய் எனவும் உரிமையாளரிடம் பேசி கரும்பு வெட்டுவார்கள். தற்போது கோடைக்காலம் என்பதாலும், தொழிலாளர்கள் சம்பளம் அதிகமாக கேட்பதாலும் வேலைக்கு ஆட்கள் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால் ரிஷிவந்தியம் பகுதியில் பல கிராமங்களில் இயந்திரங்கள் மூலம் கரும்பு வெட்டும் பணி நடந்து வருகிறது. இயந்திரத்தில் ஒரு மணி நேரத்தில் 40 டன் வரை கரும்பு வெட்டும் எனவும், ஒரு டன் கரும்பு வெட்ட 475 ரூபாய் செலவாகிறது எனவும் கரும்பு விவசாயிகள் கூறுகின்றனர்.

## கரும்புக்கு சொட்டு நீர் பாசனம் ரிஷிவந்தியத்தில் விவசாயிகள் ஆர்வம்

**ரிஷிவந்தியம்**: ரிஷிவந்தியம் பகுதியில் நிலவி வரும் தண்ணீர் தட்டுப்பாட்டினை குறைக்க விவசாயிகள் சொட்டுநீர் பாசன முறையை மேற்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் அணைகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. ரிஷிவந்தியம் பகுதியில் உள்ள விலைநிலங்களுக்காக ஆண்டுதோறும் மணிமுக்தா மற்றும் சாத்தனூர் அணைகளில் இருந்து ஆறு மற்றும் கால்வாய்கள் மூலம் தண்ணீர் திறந்து விடப்படும். மழை பெய்யாததால் ஆறு, ஏரிகள் தண்ணீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. தற்போது கோடைக்காலம் என்பதால் குடிநீர் இல்லாமல் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் விளைநிலங்களில் கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் கலக்கமடைந்து வந்தனர். நிலவி வரும் தண்ணீர் தட்டுப்பாட்டினை தவிர்க்க ரிஷிவந்தியம் பகுதி விவசாயிகள் சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்துவதில் அதிகளவு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ரூ.20 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,)

கவுண்டம்பாளையம் குடோனில், நேற்று பருத்தி ஏலம் நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,129 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 7,011 ரூபாய், குறைந்த பட்சமாக, 6,069 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,419 ரூபாய், குறைந்த பட்சமாக, 4,219 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதியைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்துச் சென்றனர். ஒரே நாளில், 20 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் போனது.

## மண்ணின் தன்மையால் உற்பத்தி அதிகரிப்பு : ஆந்திரா மீன்களுக்கு தமிழகத்தில் வரவேற்பு

**ஈரோடு**: தமிழகத்தில் கடும் வறட்சியால், நீர்நிலைகள் அனைத்தும் வரண்டதால், ஆந்திரா மாநில மீன்களுக்கு, ஈரோடு மார்க்கெட்டில் மவுசு கூடியுள்ளது.

புரோட்டின் சத்து, மீன்களில் அதிகம் கிடைப்பதால், மீன் வாங்குவோர் எண்ணிக்கை அதிகம். ஈரோட்டில் ஸ்டோனி ஃபிரிட்ஜ், காவிரி சாலை ஆகிய இடங்களில், மீன் மார்க்கெட் செயல்படுகிறது. ஸ்டோனி ஃபிரிட்ஜ் பகுதியில், 20 கடைகளும், காவிரி சாலையில், 15க்கும் மேற்பட்ட மீன் கடைகளும் உள்ளன. மீன் மார்க்கெட்டில், கடல் மீன், ஆற்று மீன், வளர்ப்பு மீன் என, மூன்று வகை உள்ளன. வஞ்சரம், அயிலை, மத்தி, வாவல், பாரை, சீலா, ராட்டு ஆகியவை கடல் வகை மீன்கள். கட்லா, லோகு, கொடுவாய், சிலேபி, நெய் மீன், விலாமீன் ஆகியவை, ஆற்று வகை மீன்கள். கடல் மீன்கள் கேரளா, ஆந்திரா, மங்களூர், தூத்துக்குடி ஆகிய பகுதியில் இருந்து, கொண்டு வரப்படுகிறது. பவானிசாகர், மேட்டூர் அணை ஆகிய இடங்களில் இருந்து, ஆற்று மீன்கள் கொண்டு வரப்படுகிறது. தவிர ஆந்திரா, கர்நாடகா பகுதியில் இருந்து பண்ணைகளில் வளர்க்கப்படும் மீன்களும், இங்கு விற்கப்படுகிறது. மீன் மார்க்கெட்டில் இருந்து, சில்லரை வியாபாரிகளும், பொதுமக்களும் மீன்களை வாங்கி செல்கின்றனர். பெருந்துறை, பவானி, பவானிசாகர், குமாரபாளையம், கொடுமுடி, காங்கேயம், வெள்ளகோவில் பகுதியை சேர்ந்த சில்லரை வியாபாரிகள், கடல் மீன்களை அதிகளவு

வாங்குகின்றனர். இந்தாண்டுக்கான பருவமழை சரிவர பொழியாததால், தமிழகத்தில் உள்ள நீர்நிலைகள் அனைத்தும் வறண்டுள்ளன. இதனால், மீன் வரத்து குறைவால், விலை, 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

ஈரோடு மீன் வியாபாரி அபுலி கூறியதாவது:

வறட்சியால் மழை இன்றி, தமிழகத்தில் மீன் உற்பத்திக்கு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இதனால், ஆந்திராவில் இருந்து அதிகளவில், மீன்களை விற்பனைக்காக வாங்கி வருகிறோம். தமிழகத்தை காட்டிலும், ஆந்திராவில் நெல் சாகுபடிக்காக பயன்படுத்தும் தண்ணீரில், வறப்பில் இருந்து வெளியேறும் உபரிநீரை கொண்டு மீன்களை வளர்க்கின்றனர். அதனால் ஆந்திராவின் மீன்கள் உற்பத்தி அதிகரித்துள்ளது. மீன் வரத்து குறைவால் அதன் விலையும், 20 சதவீதம் உயர்ந்துள்ளது. நேற்றைய நிலவரப்படி கிலோவில், லோகு, 120 ரூபாய், கட்லா, 130 ரூபாய், வாவல், 600 ரூபாய், வஞ்சிரம், 480 ரூபாய், சீலா, 280 ரூபாய், நண்டு, 250 ரூபாய், மத்தி, 40 ரூபாய், ஏட்டை (போஃன் லெஸ்), 180 ரூபாய், சுறா, 120 ரூபாய், பாறை, 300 ரூபாய், விலா மீன், 310 ரூபாய், இரால், 400 ரூபாய் ஆகிய விலைக்கு விற்கப்படுகிறது.

## 12 நாளுக்குப்பின் மஞ்சள் மார்க்கெட் திறப்பு : கிழங்கு விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

**ஈரோடு**: 12 நாட்களுக்குப்பின் நடந்த மஞ்சள் மார்க்கெட்டில், கிழ ங்கு மஞ்சள் விலை, குவிண்டாலு க்கு, 120 ரூபாய் உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மஞ்சள் மாவட்டமான, ஈரோட்டில், உற்பத்தியாகும் மஞ்சளில், 85 சதவீதம் உணவுக்காக பயன்படுகிறது. எஞ்சிய, 15 சதவீத மஞ்சள், மருந்து தயாரிப்பு, பெயின்ட், நறுமணப்பொருள், அழகு சாதன பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. வெளிச்சந்தை வியாபாரிகளோடு போட்டியிட்டு, விளை பொருட்களுக்கு உரிய விலையை, விவசாயிகளுக்கு பெற்றுத்தரும் நோக்கில், அரசால் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் துவங்கப்பட்டது. இங்கு பாதுகாத்து வைக்கப்படும் விளை பொருட்களின் மொத்த மதிப்பில், மூன்றில் இரண்டு பகுதி, விவசாயிகளுக்கு கடனாகவும் வழங்கப்படுகிறது. தவிர, ஈரோடு ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் தினமும், 11.30 மணிக்கும், நசியனூர் செம்பாம்பாளையத்தில் இயங்கும் வெளி

மார்க்கெட், 10.30 மணிக்கும், ஈரோடு கூட்டுறவு சொசைட்டி (ஈ.சி.எம்.எஸ்.,), 12.30 மணிக்கும், கோபி கூட்டுறவு சொசைட்டி (ஜி.சி.எம்.எஸ்), 1.30 மணிக்கும் ஏலம் நடக்கும். கடந்த மார்ச், 25ம் தேதி, ஒழுங்கு முறை விற்பனை கூடம் நிலவரப்படி, மொத்தம், 1,061 மூட்டை மஞ்சள் விற்பனையானது. அன்று, விரலி மஞ்சள் குவி ண்டால், 6,099 முதல், 6,869 ரூபாய்க்கும், கிழக்கு மஞ்சள், 5,86 9 முதல், 6,469 ரூபாய்க்கும் விலைபோனது. அதற்கு பின், பெரியமாரியம்மன் கோவில் பண்டிகையை முன்னிட்டு, வியாபாரிகள் சங்கம் சார்பில், மார்க்கெட்டுக்கு நேற்று முன்தினம் வரை, உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நேற்று வழக்கம்போல் ஏலம் நடந்தது. விஷேசம் முடிந்து, நேற்று அதிகளவில் மஞ்சள் மார்க்கெட்டுக்கு வரத்தாகும், என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வெறும், 729 மூட்டைகள் மட்டுமே மாதிரியாகவும், அதில், 644 மூட்டைகள் மட்டுமே விற்பனையாகின. விரலி மஞ்சள், 5,959 முதல், 6,859 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், 5,749 முதல், 6,539 ரூபாய்க்கும் விலை போனது. வெளிமார்க்கெட்டில், 1,190 மூட்டைகள் மாதிரி வந்ததில், 216 மூட்டைகள் மட்டுமே விற்பனையாகின. அதி ல் விரலி மஞ்சள், 4,899 முதல், 6,785 ரூபாய்க்கும், கிழக்கு மஞ்சள், 4,649 முதல், 6,455 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த, 25ம் தேதி மார்க்கெட்டை நேற்றைய தேதியுடன் ஒப்பிடுகையில், விரலி மஞ்சள் வெறும், பத்து ரூபாய் குறைந்தும், கிழங்கு மஞ்சள், 120 ரூபாய் அதிகரித்துள்ளது. சிறுவலூர் விவசாயி அருணாச்சலம் கூறுகையில், ""முன்பெல்லாம், ஏக்கருக்கு, 30 குவிண்டால் மஞ்சள் உற்பத்தியாகும். மழையின்மையால், ஏக்கருக்கு, 15 குவிண்டால் உற்பத்தியாவதே அரிதாக உள்ளது. தவிர, கடந்த இரு ஆண்டுகளாக, மஞ்சள் விலையில் திருப்தி இல்லை" என்றார்.

## மழையின்றி சாகுபடி பரப்பு குறைப்பு தேவை அதிகரிப்பால் விலை உயர்வு

**கோபிசெட்டிபாளையம்**: கோபி சுற்று வட்டாரத்தில், போதிய மழையின்றி, மானாவாரியில் சாகுபடி பரப்பளவு, 50 சதவீதம் வரை பாதித்துள்ளது. டன், 8,000 ரூபாய் வரை விலை கிடைப்பதால், கிணற்று பாசனம் மூலம் மரவள்ளி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கோபி சுற்று வட்டாரத்தில் கோபி, நம்பியூர் மற்றும்

டி.என்.பாளையம் பகுதிகளில், 1,500 ஹெக்டரில் மரவள்ளி சாகுபடி செய்யப்படும். மாவு பூச்சி தாக்குதலால், மரவள்ளி கிழங்கில் மாவுச்சத்து, 28 சதவீதத்துக்கு பதிலாக வெறும், 18 சதவீதமே இருந்தது. 18 சதவீத மாவு சத்தை வைத்து கொண்டு, தரமான ஸ்டார்ச்சை தயாரிக்க முடியாது. மரவள்ளி கிழங்குக்கு குறைந்த விலை கிடைத்தால், மரவள்ளி சாகுபடியை விவசாயிகள் தவிர்க்க துவங்கினர். மாவு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டால், மீண்டும் மரவள்ளி கிழங்கு சாகுபடியில், விவசாயிகள் ஈடுபட்டனர். கடந்த, இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட வறட்சியால், மகசூல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஒரு ஏக்கருக்கு, 12 டன் முதல், 15 டன் வரை மரவள்ளி விளைச்சல் கிடைக்கும். வறட்சியால், ஐந்து டன் கிடைத்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

மரவள்ளி கிழங்கு மூலம் தயாரிக்கப்படும் பொருட்களான, ஜவ்வரிசி மற்றும், ஸ்டார்ச்சுக்கு தேவை அதிகரித்துள்ளதால், நடப்பாண்டு ஒரு டன், 7,000 முதல், 8,000 ரூபாய்க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில், கடந்த, இரண்டு ஆண்டுக்கு முன், மாவு பூச்சி தாக்குதல் ஏற்பட்டதால் மரவள்ளி சாகுபடி குறைந்தது. மாவு பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, கடந்த ஆண்டு முதல் மரவள்ளி சாகுபடி செய்துள்ளோம். பருவமழை பொய்த்து விட்டதால் மரவள்ளி பரப்பளவு, 50 சதவீதம் குறைந்து விட்டது. மானாவாரி நிலங்களில் பயிரிட்ட மரவள்ளி கிழங்கு, ஐந்து அடிக்கு ஒரு செடி வளர்க்கப்படும். மழையின்மையால், ஏக்கருக்கு, 15 டன் கிடைக்க வேண்டும். ஆனால், ஐந்து டன் கிழங்கு கிடைப்பதே அரிதாக உள்ளது. தேவை அதிகரிப்பால் டன், 7,000 ரூபாய் முதல், 8,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### வால்பாறையில் கன மழை; விவசாயிகள் மகிழ்ச்சி

**வால்பாறை** : நீண்ட இடவெளிக்கு பிறகு வால்பாறையில் இடியுடன் கூடிய கன மழை பெய்ததால், மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.வால்பாறை நகர் மற்றும் எஸ்டேட் பகுதிகளில் நேற்று பிற்பகல் 2.00 மணி முதல் இடியுடன் கூடிய கன மழை பெய்தது. இதனால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தொழிலாளர்கள் தேயிலை பறிக்கும் பணியில் ஈடுபடமுடியாமல் பரிதவித்தனர். இடைவிடாமல் பெய்த கன மழையினால்

மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனிடையே நீண்ட இடைவெளிக்கு பிறகு வால்பாறையை குளிவித்த கோடைமழையினால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## நிலக்கடலை வரத்து அதிகரிப்பு

**அவிநாசி** : சேவூரில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு வரத்து அதிகரித்தது. அனைத்து ரகங்களின் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 700 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டிலும், 150 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்ததோடு, விலையும் உயர்ந்தது. நிலக்கடலை முதல் ரகம் ரூ.4,000 முதல் 4,190 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,750 முதல் 3,970 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,900 முதல் 3,300 வரை ஏலம் போனது. கடந்த வாரத்தை விட அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.350 வரை அதிகரித்திருந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது.

## இலவச கோழி வளர்ப்பு பயிற்சி

**கரூர்**: பண்டுதகாரன்புதூர் கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும் 11 ம்தேதி லாபகரமான நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.

பயிற்சியில், வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, தீவன பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் தடுக்கும் முறைகள், மரபுசாரா மருத்துவ முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் வரும், 11 ம் தேதி காலை 9.30 மணிக்கு மைய அலுவலகத்துக்கு வரவேண்டும். மேலும், விபரங்களுக்கு 04324-294335 என்ற அலுவலக தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தகவலை கால்நடை பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குநர் அகிலா தெரிவித்துள்ளார்.

## தாண்டிக்குடியில் கனமழை

**தாண்டிக்குடி** : தாண்டிக்குடி மலைப்பகுதியில் நேற்று மாலை இடியுடன் கூடிய கனமழை அரை மணி நேரம் பெய்தது. பருவ மழை பொய்த்து சுட்டெரிக்கும் வெயில், பனியின் தாக்கம் என வறண்ட வானிலை நீடித்து விவசாயங்கள் பாதித்தது. தொடர்ந்து நீர் நிலைகளில் தண்ணீரின்றி குடிநீர் பிரச்னைகள் அதிகரித்தன. குறுவிவசாயங்களான அவரை, பீன்ஸ், சவ்சவ் உள்ளிட்டவைகள் மழையின்றி பூ, பிஞ்சுகள் உதிர்ந்து செடிகள் கருக தொடங்கியது. மிளகு, காபி, மலை வாழை உள்ளிட்ட மலை விவசாயங்களும் பாதித்திருந்தது. நேற்று மாலை 5 மணிக்கு இடியுடன் கூடிய கனமழை தாண்டிக்குடி, பண்ணைக்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள மலை கிராமங்களில் பெய்தது. தற்போதைய மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் சாரல் மழை பெய்த வண்ணம் இருந்தது. தொடர்ந்து சில தினங்களாவது மழை பெய்தால் தான் குடிநீருக்கு பஞ்சம் இருக்காது, என, மலை கிராமமக்கள் தெரிவித்தனர்.

## ஏலக்காய் மகசூல் குறையும் அபாயம்; ஏலத்தோட்டங்களில் வறட்சி

**கம்பம்** : வறட்சியின் பிடியில் ஏலத்தோட்டங்கள் சிக்கியுள்ளதால், காய்ந்து, கருகி வரும் செடிகளில் சரம் பிடிக்காத நிலை காணப்படுகிறது. இதனால், வரும் சீசனில் ஏலக்காய் மகசூல் கடுமையாக பாதிக்கும், என்று ஏலத்தோட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் ஏலக்காய் சாகுபடி கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மாநிலங்களில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இதில் கேரளாவில் மட்டும் 1.5 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்யப்படுகிறது. மத்திய அரசு, இடுக்கி மாவட்டத்தில் மூன்று தாலுகாக்களை "கார்டமம் ரிசர்வ்' என்று அறிவித்துள்ளது. ஆண்டிற்கு ஆண்டு மழையளவு குறைந்து வருகிறது. விலையும் கிடைப்பதில் தேக்கநிலை காணப்படுகிறது. இந்த ஆண்டு கடந்த சில மாதங்களாகவே மழை பெய்யவில்லை. இதனால், ஏலத்தோட்டங்களில் உள்ள கிணறுகளை பயன்படுத்தி தண்ணீர் பாய்ச்சி வந்தனர். தொடர்ந்து மழை பெய்யாததால், கிணறுகளிலும் தண்ணீர் வற்றத் துவங்கியுள்ளது. மழை பெய்யாதது மட்டுமில்லாமல், கடும் வெப்பம் நிலவுகிறது. இதனால் ஏலச் செடிகள் கருகத் துவங்கியுள்ளன. இது தொடர்பாக, விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை பரிந்துரை செய்யும், ஏலவிவசாய

தொழில்நுட்ப ஆலோசகர்கள் அன்பழகன், பாண்டியராஜன் கூறியதாவது: இதே நிலை தொடர்ந்தால், மகசூல் பாதிப்பு ஏற்படும். இப்போது பூப்பூத்து, சரம் பிடிக்க வேண்டிய நேரம். பூப்பூத்து கருகத் துவங்கியுள்ளது. சரம் உதிர்ந்து வருகிறது. வெயில் அதிகரிக்க அதிகரிக்க, நோய் தாக்குதல் காணப்படுகிறது. மழை பெய்தாலன்றி, ஏலச் செடிகள் தப்பிக்க வழியில்லை' என்றனர். உடும்பன்சோலை, நெடுங்கண்டம், பாரத்தோடு, கணவாக்குழி, மாலி, வண்டன்மேடு, புளியன்மலை, சாஸ்தான்ஓடை, மாதவன்கானல், சுல்தானியா, இஞ்சிப்பிடிப்பு உள்ளிட்ட பல பகுதிகளில், தட்டைகள் முறிந்து விழும் நிலையில் உள்ளன.

### மாம்பழ சீசன் தொடக்கம்; விளைச்சல் குறைவால் கவலை

**தேனி** : தேனி மாவட்டத்தில், மா சீசன் தொடங்கியும், விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். மாவட்டத்தில் 9123 எக்டேரில் அல்போன்சா, ஹூமாயுதீன், பெங்களூரா, நீலம் போன்ற மா ரகங்கள் சாகுபடி நடக்கிறது. மாவட்டத்தில் போடி, பெரியகுளம் பகுதியில் மா விளைச்சல் அதிகம் உள்ளது. ஆண்டுக்கு சராசரியாக, 61 ஆயிரத்து 663 டன் மாம்பழங்கள் விளைவிக்கப்படுகிறது. நடப்பு ஆண்டு மா மரங்களில் பூக்கள் அதிகம் பூத்தது. ஆனால் தொடர் வறட்சி காரணமாக பூக்கள், பிஞ்சுகள் உதிர்ந்து விட்டன. இதனால் 70 சதவீதம் விளைச்சல் குறைந்து விட்டது. நடப்பு ஆண்டு 25 ஆயிரம் டன் மா விளைச்சல் கிடைப்பதே சந்தேகம், என்ற நிலை காணப்படுகிறது. விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன் கூறியதாவது:தற்போது சீசன் தொடங்கி உள்ளது. ஆண்டிபட்டி, வருஷநாடு பகுதியில் "கறிக்காய்' பறித்து விற்பனை செய்கின்றனர். இன்னும் 10 நாட்களில் மாம்பழம் சந்தைக்கு வந்து விடும். அதன் பிறகே விலை பற்றி தெரியவரும். விளைச்சல் மிகவும் குறைந்துள்ள நிலையில், விலையாவது கிடைக்கும், என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர், என்றார்.

### விவசாயிகள் மகிழ்ச்சி

**வருஷநாடு** : வருஷநாடு பகுதிகளில்,பத்தாயிரம் ஏக்கரில் இலவம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு போதிய மழை இல்லை. இதனால் காய்ப்பு முற்றிலும் குறைந்து விட்டது. கடந்த சில தினங்களாக, கிலோ ரூ.45க்கு

விற்கப்பட்ட இலவம் பஞ்சு, தற்போது ரூ.50 விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தாண்டு போதிய மழை இல்லாததால், 100 மூடை காய்ப்புக்கு வரக்கூடிய நிலத்தில், வெறும் 15 மூடை மட்டுமே கிடைத்துள்ளது. இதனால் இந்தாண்டு விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் கூறினர்.

## காலாப்பட்டு, ஆரோவில் பகுதியில் அறுவடைக்கு தயாராகும்முந்திரி




**புதுச்சேரி**: ஆரோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் முந்திரி சீசன் களை கட்டியுள்ளது. ஆரோவில், குயிலாப் பாளையம், பெரிய காலாப்பட்டு, சின்ன காலாப்பட்டு, பிள்ளைச்சாவடி ஆகிய பகுதிகளில் 15 ஹெக்டேர் பரப்பில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியை தாங்கி, அதிக லாபம் தரும் சாகுபடியாக முந்திரி திகழ்வதால் தரிசு நிலத்தின் தங்கமாக முந்திரியை விவசாயிகள் கருதுகின்றனர்.

தானே புயலின்போது முந்திரி மரங்கள் முறிந்து விழுந்ததால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது. கடந்தாண்டும் முந்திரி மகசூல் குறிப்பிட்டு சொல்லும்படி இல்லை. இந்தாண்டு, முந்திரி மகசூலுக்காக டிசம்பர் மாத இறுதியில் உரம் இட்டு வளப்படுத்தி இருந்தனர். பிப்ரவரி, மார்ச் மாதங்களில் முந்திரி மரங்களில் கொத்துக் கொத்தாக பூபூத்து, காய் பிடித்தது. முந்திரி மரங்களில் முன்னதாக பிடித்த பூக்கள், தற் போது, காயாக முற்றி அறுவடைக்கு தயாராக உள்ளன. மே, ஜூன், ஜூலை மாதங்களில் அறுவடை செய்து, லாபம் பெறலாம் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர்.

**தர்பூசணி, வெள்ளரி பழம் விற்பனை ஜோர்**

**புதுச்சேரி**: வெயிலின் உக்கிரம் அதிகரித்து வருவதால், வெள்ளரி பழம் விற்பனை சூடு பிடித்துள்ளது. புதுச்சேரியில் கோடைக்காலம் துவங்கியதையொட்டி, நுங்கு, இளநீர், தர்பூசணி, வெள்ளரி பழம் உள்ளிட்ட குளிர்ச்சியான பொருட்களை மக்கள் வாங்கி சாப்பிட்டு, உஷ்ணத்தைத் தணித்துக் கொள்கின்றனர். மரக்காணம், திண்டிவனம், முண்டியம்பாக்கம் பகுதியில் விளைந்த வெள்ளரி பழம், தாவரவியல் பூங்கா எதிரில் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

வெள்ளரி பழம் ஒரு கிலோ 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெற்றிலை விலை உயர்வு**



**பரமத்தி வேலூர்**: நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் வட்டம் வெங்கரை குச்சிப்பாளையம், பாண்டமங்கலம், வேலூர், அனிச்சம்பாளையம், நன்செய் இடையாறு பொய்யேரி, குப்புச்சிப்பாளையம் உள்பட ஏராளமான ஊர்களில் அதிகளவில் வெற்றிலை பயிரிட்டு வருகிறார்கள். இங்கு பயிரிட்ட வெற்றிலையை தினசரி கூடும் பரமத்தி வேலூர் நான்கு ரோடு ஏலச்சந்தைக்கு விவசாயிகள் கொண்டு வந்து ஏலம் விடுகின்றனர். கடந்த வாரம் கற்பூரி முதல் ரகம் வெற்றிலை ரூ.2,300 க்கும், 2வது ரகம் ரூ.2,000 க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3,000 க்கும், இரண்டாவது ரகம் ரூ.2,500 க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம்

ரூ.2,500 க்கும், 2வது ரகம் ரூ.2,300க்கும் ஏலம் போனது. அதேபோல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ.3,500 க்கும், 2வது ரகம் ரூ.3,000 க்கும் ஏலம் போனது. கும்பாபிஷேகம் மற்றும் திருவிழா காலங்கள் என்பதால், வெற்றிலை விலை உயர்ந்துள்ளது.

**தேர்தல் பறக்கும்படை கெடுபிடி ஆத்தூரில் பருத்தி ஏலம் ரத்து**



**ஆத்தூர்**: சேலம் மாவட்டம் ஆத்தூர் புதுப்பேட்டையில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இங்கு வாரம் தோறும் திங்கட்கிழமையில் பருத்தி ஏலம் நடைபெறுவது வழக்கம். இந்த ஏலத்தில் சேலம், பெரம்பலூர், விழுப்புரம், கடலூர், நாமக்கல் மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்பார்கள். தற்போது தேர்தல் பறக்கும் படையினர் கெடுபிடிகளால் பருத்தி ஏலத்தில் கலந்த கொள்ள வரும் குறுபருத்தி வியாபாரிகள் மற்றும் கமிஷன் ஏஜென்ட்கள் பருத்தி கொள்முதலுக்காக ரொக்க பணம் கையில் எடுத்து வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் பெரிய அரவை ஆலை நிறுவனத்தினருக்கும் வங்கிகளில் பண பரிமாற்றத்திலும் சிக்கல்கள் ஏற்பட்டு வருகிறது. இதனால் கடந்த வாரம் நடைபெற்ற பருத்தி ஏலத்தின் எடுக்கப்பட்ட னீ6 கோடி மதிப்பிலான பருத்தி மூட்டைகள் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதனால் நேற்று நடைபெற வேண்டிய பருத்தி ஏலத்தை சங்க நிர்வாகத்தினர் ரத்து செய்துள்ளனர்.

**முட்டை விலை 242 காசுகளாக உயர்வு**



**நாமக்கல்**: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 2 காசுகள் உயர்ந்துள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு விலை நிர்ணய குழு கூட்டம் நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் முட்டை விலையில் 2 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து முட்டையின் விலை 242 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ40 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ68 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (பைசா வில்) பெங்களூர்- 260, மைசூர்- 267, ஐதராபாத்- 235, மும்பை- 273, விஜயவாடா- 245, கொல்கத்தா- 285, பர்வாலா- 228, டெல்லி- 237 காசுகள்.

**காப்பி பயிர்களில் வெள்ளை தண்டு கரப்பான் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வழிமுறை**

**ஏற்காடு**,: தமிழகத்தில் போதிய மழை இல்லாததாலும், கோடை வெயில் கொளுத்தி வருவதாலும் நீர்நிலைகள் வறண்டு காணப்படுகிறது. சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கடும் வறட்சி நிலவுவதால், மலை பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள காப்பி செடிகள் போதிய நீரின்றி காய்ந்து வருகிறது.

இதன் காரணமாக, காப்பி செடிகளில் வெள்ளை தண்டு கரப்பான் பூச்சி தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனால் காப்பி பயிர் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்துள்ளனர். இதனை அடுத்து வேளாண் அதிகாரிகள் கரப்பான் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகளை தெரிவித்துள்ளனர். அதில் பாதிக்கப்பட்ட செடிகளை கண்டறிந்து அவற்றை உடன் எரித்து விடவேண்டும். தோட்டங்களில் சரியான

நிழல் பராமரிப்பு முறைகளை கையாள்வது அவசியம். வெள்ளை தண்டு துளைப்பான் பாதிப்பை தடுக்க 10 சதவீதம் சுண்ணாம்புக்கலவை 200 மிலிட்டர் வரை தண்ணீரில் கலந்து செடிபகுதியில் தடவ வேண்டும். இனக்கவர்ச்சி பொறியை காப்பித்தோட்டங்களில் ஒரு ஏக்கருக்கு 1.0 என்ற அளவில் வைப்பதன் மூலம் வெள்ளை தண்டு துளைப்பான் பாதிப்பை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**அரூர் மண்டிகளுக்கு புளியங்கொட்டை வரத்து ஒரு டன்னாக உயர்ந்தது**

**அரூர்**,: அரூர் மண்டிகளுக்கு புளியங்கொட்டை வரத்து தினமும் ஒரு டன்னாக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் மார்ச் ஏப்ரல் மாதங்களில் புளி அறுவடை சீசனாகும். தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தமிழகத்திலேயே அதிகளவில் புளி விளைவிக்கப்படுகிறது. மாநிலத்தின் 50 சதவீத புளி தேவையை இந்த இரு மாவட்டங்கள் மட்டுமே பூர்த்தி செய்கிறது.

புளிய மரத்தின் இலை, பழம், பட்டை, கொட்டை அனைத்துமே மருத்துவத்திற்கு பயன்படுகிறது. புளிய கொட்டையில் 63 சதவீத மாவு பொருட்கள் உள்ளது. புளியங்கொட்டையிலிருந்து பொடி எடுக்கப்பட்டு துணி மெருகூட்டவும், சணல் நார், செயற்கை நூல் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

இதன் தோல் பகுதிகள் தோல் பதனிடுதல், ஓட்டு பலகை தயாரித்தல் உள்ளிட்டவைகளில் பயன்படுத்தப்படுகிறது. இதன் எண்ணெய் வார்னீஷ், பெயிண்ட் தாயரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. மாட்டு தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. முன்பு எதற்கும் பயன்படுத்தாமல் உரமாக குப்பைகளில் கொட்டடப்பட்டு வந்து புளியங்க கொட்டை அதிகளவில் பயன்படுவதால், இதன் விலை அதிகரித்துள்ளது. தற்போது கிலோ தி17 வரை வாங்கப்படுகிறது. அரூர் மண்டிகளில் புளி அறுவடை சீசனில் தினந்தோறும் ஒரு டன் அளவிற்கு விற்பனைக்கு வருகிறது.

**வரத்து அதிகரிப்பால் விற்பனையாகாமல் அழுகும் பெரிய வெங்காயம்**

**பொள்ளர்சி,**: பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு கர்நாடக, ஆந்திர, மகாராஷ்ட்ரா உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தே பெல்லாரி வெங்காயம் என்னும் பெரிய வெங்காயம் அதிகமாக விற்பனைக்கு கொண்டுவரப்படு கிறது.

மேலும் தமிழகத்தில் திருப்பூர், கரூர், சேலம் என குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்தும் வருகிறது. பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு இறக்குமதியாகும் பெல்லாரி வெங்காயத்தில் சுமார் 70 சதவீதம் கேரள மாநிலத்துக்கு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு முறையும் பெல்லாரி வரத்தை பொறுத்து அதன் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

தற்போது, கர்நாடக மற்றும் ஆந்திர மாநிலங்களில் பெல்லாரி வரத்து குறைந்தாலும், மகாராஷ்ரா மாநிலமான அகமத்நகர், பூனே, நாசிக், சோம்பூர் உள்ளிட்ட பகுதிகளில் விளைச்சல் அதிகரிப்பால், கடந்த பிப்ரவரி மாதம் முதல் வரத்து அதிகரித்துள்ளது. தினமும் சுமார் 3 ஆயிரம் டன் [a]பெல்லாரி பொள்ளாச்சி மார்க்கெட்டில் இறக்குமதியாகிறது. கடந்த ஒரே மாதத்தில், சுமார் 75ஆயிரம் டன் பெல்லாரி வெங்காயம் கொண்டுவரப்பட்டுள்ளது. பெல்லாரி வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 2 மாதத்திற்கு முன்பு கிலோ ரூ.40 வரை விற்பனையான பெல்லாரி, தற்போது முதல் தரம் ஒருகிலோ ரூ.15க்கும், இரண்டாம் தரம் ரூ.13க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சில்லரை வியாபாரிகள் ரூ.2 அல்லது ரூ.3 அதிகரித்து விற்பனை செய்கின்றனர்.

இந்நிலையில் பெல்லாரி வரத்து நாளுக்குநாள் அதிகரித்து வருவதால், எதிர்பார்த்த அளவிற்கு விற்பனையாகாமல் அவை தேக்கமடைகிறது.

மேலும், தேக்கமடைந்த பெல்லாரிகள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இப்படி, நகரில் பல கடைகளில் தேக்கமடைந்து அழுகிய பெல்லாரிகளை ரோட்டோரம் கொட்டி செல்வதாக கூறப்படுகிறது.

நல்லூரில் இருந்து ஜமீன்ஊத்துக்குளி செல்லும் ரோட்டோரம் அழுகிய பெல்லாரிகள் அதிகளவு கொட்டப்பட்டுள்ளதை காணமுடிகிறது

**மாத்தி யோசித்த விவசாயிகள் கத்தரி, தக்காளி கைவிட்டதால் கோவக்காய் பயிரிட ஆர்வம் கேரள மக்களுக்கு 'கொள்ளை இஷ்டமாம்'**

**சின்னமனூர்**, : கேரள பகுதி மக்கள் விரும்பி சாப்பிடுவதால் சின்னமனூர் பகுதி கிராமங்களில் பந்தல் அமைத்து கோவக்காய் சாகுபடியை விவசாயிகள் துவக்கி உள்ளனர்.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி தமிழகத்தையும், கேரளாவையும் இணைத்து பிரிக்கிறது. தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு செல்லும் வழிகளில் திருநெல்வேலி, நாகர்கோவில், கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஒட்டன்சத்திரம், பழனி, கொடைக்கானல், போடிமெட்டு, கம்பம்மெட்டு, சாக்கலுத்துமெட்டு, ராமக்கல்மெட்டு, குமுளி உள்ளிட்ட ஊர்கள் உள்ளன. குறிப்பாக, கோவை, திருநெல்வேலி, திண்டுக்கல், தேனி ஆகிய மாவட்டங்கள் இதில் அடங்கும். இப்பகுதிகளில் விளைவிக்கப்படும் காய்கறிகள் மேற்குறிப்பிட்ட ஊர்களின் வழியாக கேரளாவுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. கேரள மக்களுக்கு காய்கறிகளில் குறிப்பாக கோவக்காய் என்றால் கொள்ளை இஷ்டம். மற்ற காய்களை விட இந்த காயை விரும்பி உண்கின்றனர். அதனால் எல்லா மார்க்கெட், ஏலச்சந்தைகளிலும் கேரள வியாபாரிகள் மற்ற காய்களை காட்டிலும் கோவக்காய் இருந்தால் கொஞ்சம் அதிமாகவே கொள்முதல் செய்கின்றனர். இந்நிலையில் சின்னமனூர் சுற்றியுள்ள பல கிராமங்களில் கத்தரி, தக்காளி போன்ற காய்கறிகளை விவசாயம் செய்து வந்தனர். பூச்சி தாக்குதல், தண்ணீர் இல்லாமை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இந்த காய்கறிகளின் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனால் விவசாயிகள் லட்சக்கணக்கில் நஷ்டம் அடைந்து வந்தனர். இதே நிலைதான்... திராட்சை உள்ளிட்ட விவசாயங்களுக்கும். தற்போது கேரள பகுதி மக்கள் கோவக்காயை ஆர்வமாக வாங்குவதால், சின்னமனூர் பகுதி விவசாயிகள் பந்தல் அமைத்து கோவக்காய் சாகுபடி செய்து வருகின்றனர். இதற்காக கற்கால்களை நட்டு, கம்பி வலை பந்தல் அமைத்து கோவக்காய் கொடியே பயிரிட்டு வருகின்றனர். காய்கறிகள் விவசாயம் செய்து வருகின்றனர். கோவங்காய் விசயம் தெரிந்தவுடன் பல விவசாயிகள் பந்தல் அமைத்து கொடிகளை படரவிட்டு கோவங்காய் சாகுபடிக்கு மாறி வருகின்றனர். மற்ற விவசாயத்திலிருந்து கொஞ்சம் மாறுபட்டு ஆர்வமுடன் செய்து வருவதால்

சின்னமனூர் சுற்றியுள்ள பல கிராமங்களில் கற்கால்களை நட்டும் கம்பி வலை பந்தல் அமைத்து தீவிரம் காட்டிட துவங்கியுள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சூளகிரி பகுதியில் கொத்தமல்லி விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



சூளகிரி பகுதியில் கொத்தமல்லி விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கொத்தமல்லி விலை உயர்ந்தது</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி சுற்று வட்டாரத்தில் விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர். இவர்களில் பலர் கொத்தமல்லி பயிரிட்டுள்ளார்கள். சூளகிரியில் இருந்து வெளியூர்களுக்கு தினமும் கொத்தமல்லி கட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

கடந்த வாரம் வரையில் கொத்தமல்லி விலை குறைந்திருந்தது. கட்டு ரூ.1-க்கு விற்கப்பட்டது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தார்கள். உற்பத்தி செலவு கூட கிடைக்கவில்லை என பலரும் வேதனையுடன் தெரிவித்தனர். இந்த நிலையில் கொத்தமல்லி விலை படிப்படியாக உயர்ந்து நேற்று ஒரு கட்டு ரூ.8-க்கு

விற்கப்பட்டது. கொத்தமல்லி கட்டின் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். இது குறித்து செம்பரசனப்பள்ளியை சேர்ந்த விவசாயி பாப்பண்ணா கூறியதாவது:-

<u>விளைச்சல் குறைந்துள்ளது</u>

கொத்தமல்லி விலை வீழ்ச்சியாக இருந்ததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தோம். இந்த நிலையில் தற்போது கட்டு ரூ.8-க்கு விலை போகிறது. இதனால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. தற்போது பல இடங்களில் கொத்தமல்லி விளைச்சல் குறைந்துள்ளதால் நல்ல விலை கிடைக்கிறது. இவ்வாறுஅவர்கள்கூறினார்கள்.

**தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக்கோரி விவசாயிகள் மனு**



**பவானிசாகர்,**

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, பெருமுகை, அத்தாணி வாய்க்கால் பாசன விவசாயிகள் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் தலைவர் சுகுமார், செயலாளர் நாச்சிமுத்து மற்றும் அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவர் தளபதி உள்ளிட்ட விவசாயிகள் அமைப்பை சேர்ந்த 200 பெண்கள் உட்பட 500 விவசாயிகள் பவானிசாகர் பொதுப்பணித்துறை பொறியாளர் நடராஜனை நேரில் சந்தித்து மனு ஒன்றை கொடுத்தனர்.

அந்த மனுவில், 'ஏப்ரல் 15–ந் தேதி தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் வழக்கம்போல் தண்ணீர் திறக்க வேண்டும்' என்று கூறி இருந்தனர்.

மனுவை பெற்றுக்கொண்ட அதிகாரி நடராஜன் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

**உற்பத்தி அதிகரிப்பால் ஓசூரில் ரோஜாக்களின் விலை கடும் வீழ்ச்சி**



**ஓசூர், -**

உற்பத்தி அதிகரிப்பால் ஓசூரில் ரோஜாக்களின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் ரோஜாக்களை விற்பனை செய்யாமல் செடியிலேயே விட்டுவிடும் அவலம் ஏற்பட்டுள்ளது.

<u>ஓசூர் ரோஜாக்கள்</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சுற்று வட்டார பகுதி ரோஜா மலர்கள் உற்பத்திக்கு பெயர் போன நகரமாகும். இங்குள்ள மண்வளம் மற்றும் குளிர்ந்த சீதோஷண நிலை காரணமாக ரோஜாக்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகின் றன. குறிப்பாக பர்ஸ்ட்ரெட், கிரானைட், ரெட்ரோஸ், தாஜ்மகால், நொப்ளஸ், ஆலி வுட் உள்பட 48 வகையான ரோஜாக்கள் உற்பத்தி செய் யப்படுகின்றன. ஆண்டு தோறும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் காதலர் தினத்தையொட்டி பல

கோடி ரோஜக்கள் ஓசூர் பகுதியில் இருந்து வெளியூர்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

விலை வீழ்ச்சி

இந்த ஆண்டு காதலர் தினம், புத்தாண்டு சமயத்தில் ஒரு ரோஜா ரூ.10 வரையில் விலை போனது. ஆனால் தற்போது ஒரு ரூபாய்க்கு கூட விலை போகாத அளவிற்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

ரோஜா பூக்களை வெட்டி, பேக்கிங் செய்து, வெளியூர் களுக்கு அனுப்பும் கூலி கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பல ரும் ரோஜா மலர்களை பறிக்காமல் அப்படியே விட்டு விடு கிறார்கள்.

மேலும் சிலர் ரோஜாக்களை சாலையோரம் கொட்டி சென்றுள்ளனர்.

உற்பத்தி அதிகரிப்பு

இது குறித்து ஓசூர் அருகே உள்ள கசவுகட்டாவை சேர்ந்த விவசாயி மல்லேஷ் ரெட்டி கூறியதாவது:-

ஓசூர் சுற்று வட்டார பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக ரோஜாக்கள் உற்பத்தி செய்யும விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தற்போது ரோஜாக்கள் வாங்குபவரின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இதனால் ரோஜாக்கள் அப் படியே தேங்கி விடுகின்றன.

மேலும் பராமரிப்பு செலவு மற்றும் பறிக்கும் கூலி கூட கிடைப்பதில்லை.

இதனால் பலரும் ரோஜாக்களை பறிக் காமல் அப்படியே விட்டு விடுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தஞ்சையில் இருந்து சென்னைக்கு சரக்குரெயிலில 1000 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது**



தஞ்சையிலிருந்து சென்னைக்கு நெல் மூட்டைகளை கொண்டு செல்ல தொழிலாளர்கள் ரெயிலில் ஏற்றிய போது எடுத்த படம்.

**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சென்னைக்கு சரக்குரெயிலில் 1000 டன் நெல் அரவைக்கு அனுப்பப்பட்டது.

<u>நெல்அறுவடை</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என காவிரிடெல்டா மாவட்டங்கள் அழைக்கப்படுகின்றன. காவிரிடெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என முப்போகம் நடைபெறுவது வழக்கம். தற்போது சம்பா சாகுபடி அறுவடை பணிகள் நடைபெற்று வருகின்றன.

அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

<u>1000 டன் நெல் அரவைக்கு...</u>

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளும், பிள்ளையார்பட்டி, பருத்தியப்பர்கோவில், புனல்குளம் ஆகிய இடங்களில் உள்ள சேமிப்பு கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளும் அரவைக்காக சென்னைக்கு அனுப்ப லாரியில்

ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டன. பின்பு அங்கு நின்ற சரக்கு ரெயிலில் நெல் மூட்டைகள் அனைத்தும் ஏற்றப்பட்டன. மொத்தம் 25 வேகன்களில் 23 ஆயிரத்து 850 நெல் மூட்டைகள் அடங்கிய 1000 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து சென்னைக்கு அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன.

**பெரியகுளம் பகுதியில் பலத்த காற்று மா பிஞ்சுகள் உதிர்வதால் விவசாயிகள் கவலை**



பெரியகுளம் பகுதியில் வீசி வரும் பலத்த காற்றால் மா மரங்களில் இருந்து பிஞ்சுகள் உதிர்ந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மா விளைச்சல்

தேனி மாவட்டம், பெரிய குளம் பகுதிகளான கும்பக் கரை, சோத்துப்பாறை, முருக மலை, மஞ்சளாறு, சலுப்பக் குளம், உப்புக்காடு, சரக்காடு, தொண்டகுத்தி, வாலாட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் பல ஆயிரம் ஏக்கர் பரப் பளவில் மாந்தோப்புகள் உள்ளன. இங்கு செந்தூரம், பங்கனபள்ளி, கல்லாமை, காசா, காளப்பாடி, மல்கோவா, காதர், நாட்டுக்காய் உள்ளிட்ட பல்வேறு ரக மாங்காய்கள் விளைகின்றன.

கடந்த ஆண்டு மாங்காய் சீசனில் மழை பெய்யாத காரணத்தால் விளைச்சல் குறைவாக இருந்தது. இந்த நிலையில் இந்த ஆண்டு சீசன் கடந்த மாதம்

தொடங்கியது. மா மரங்களில் பூத்து குலுங்கிய பூக்கள் பிஞ்சுகளாக மாறியுள் ளன. கடந்த மாதம் இங்கு பெய்த மழை, பிஞ்சுகள் நன்றாக வளர்ச்சி அடைய ஏதுவாக இருந்தது.

பிஞ்சுகள் உதிர்வு

இந்த நிலையில் தற்போது பெரியகுளம் சுற்று வட்டார பகுதிகளில் கடுமையான வெயில் நிலவி வருகிறது. மேலும் காற்றும் பலமாக வீசி வருகிறது. மாந்தோப்புகள் உள்ள பகுதியில் காற்று பலமாக வீசுவதால் மா மரங் களில் காய்த்திருக்கும் பிஞ்சு கள் கீழே விழுந்து விடுகின்றன. குறிப்பாக கல்லாமை ரக பிஞ்சுகள் அதிக அளவில் கீழே விழுகின்றன. சில இடங்களில் விளைச்சல் இல்லாமல் சிறுத்து காணப்படும் காசா ரக மாங்காய்களும் கீழே விழுந்து விடுகின்றன. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்து உள்ளனர். மாங்காய் விளைச்சலை எதிர் பார்த்து காத்திருக்கும் விவசாயிகள், நாள்தோறும் தோப்புகளுக்கு சென்று கீழே விழும் பிஞ்சுகளை எடுத்து விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். பெரியகுளம் புதிய பஸ் நிலையம் அருகில், மார்க்கெட் பகுதியிலும் மா பிஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மழை பெய்தால் மட்டுமே மா விளைச்சல் அதிகரிக்கும் என்ற நிலையில் விவசாயிகள் மழை வேண்டி சிறப்பு வழிபாடு நடத்த உள்ளனர்.

**விளைச்சல் குறைந்ததால் தேங்காய் விலை உயர்வு**



கடமலை-மயிலை ஒன்றியத்தில் உள்ள தென்னந்தோப்பில் தேங்காய் மட்டையை உறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்.

கடமலை-மயிலை ஒன்றியத்தில் விளைச்சல் குறைந்ததால் தேங்காய் விலை உயர்ந்து உள்ளது.

தென்னை விவசாயம்

தேனி மாவட்டம் கடமலை- மயிலை ஒன்றியத்தில் ஏராள மான ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப் பட்டு உள்ளது. இந்த ஒன்றியத் தில் தென்னை விவசாயமே முதன்மையாக நடைபெற்று வருகிறது. பறிக்கப்படும் தேங்காய்கள் இந்த பகுதிகளில் உள்ள குடோன்களில் வைத்து முதல் தரம், 2-ம் தரம் என பிரிக்கப்பட்டு வெளியூர் களுக்கு ஏற்றுமதி செய்யப்படு கிறது.

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக கடமலை- மயிலை ஒன்றியத்தில் மழை அளவு குறைந்ததால் வைகை ஆறு நீர்வரத்து இன்றி வற்றி யது. இதனால் இந்த பகுதி களில் நிலத்தடி நீர் மட்டம் வறண்டு, விவசாய கிணறு களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்தது. தண்ணீர் பாய்ச்ச முடியாமல் ஏராளமான தென்னை மரங்கள் கருகின.

விலை அதிகரிப்பு

தென்னை மரங்கள் கருகிய தால், ஏராளமான விவசாயிகள் அவற்றை வெட்டி அழித்து வருகின்றனர். மேலும் தண்ணீர் பற்றாக்குறையால் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறியும் மரங்களை காப்பாற்ற முடியவில்லை.

மரங்கள் அழிக்கப்பட்டதாலும், மழை இல்லாததாலும் தேங்காய் விளைச்சல் குறைந்தது. இதை தொடர்ந்து தேங்காய் விலை அதிகரித்துள்ளது.

கடமலை-மயிலை ஒன்றிய பகுதிகளில் பறிக்கப்படும் முதல் தர தேங்காய் 20 ரூபாய் வரையும், 2-ம் ரக தேங்காய் 15 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது. இதை யடுத்து, மளிகை கடைகளில் சில்லரை விற்பனைக்கு தேங்காய் கிடைப்பது குதிரை கொம்பாக உள்ளது.

அடுத்த சில மாதங்கள் கோடை காலம் என்பதால் தேங்காய் உற்பத்தி மேலும் குறையும் நிலை ஏற்பட்டு இருக்கிறது.

இதனால் தேங்காய் விலை மேலும் அதிகரிக்கும் நிலை உள்ளது.

**கிழக்கு கடல் பகுதியில் ஆழ்கடலில் விசைப்படகு மூலம் மீன்பிடிக்க தடை வருகிற 15–ந்தேதி முதல் 45 நாட்கள் அமல்**



**கன்னியாகுமரி,**

குமரி மாவட்டத்தில் கிழக்கு பகுதி ஆழ்கடலில் விசைப்படகு மூலம், மீன் பிடிக்க வருகிற 15–ந்தேதி முதல் 45 நாட்களுக்கு தடை விதிக்கப்படுகிறது.

மீன்பிடிக்க தடை

தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதிகளான கன்னியாகுமரி முதல் சென்னை திருவள்ளூர் வரை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஆழ்கடலில் விசைப்படகு மூலம் மீன்பிடிக்க தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது.

இந்த காலங்களில் மீன் இனங்கள் முட்டையிட்டு குஞ்சு பொரித்து இனப்பெருக்கம் செய்யும் காலமாகும். அந்த சமயத்தில் ஆழ்கடலில் விசைப்படகுகள் மூலம் மீன் பிடித்தால் மீன் இனம் அழியும் அபாயம் ஏற்படும் என்பதால் இந்த தடை விதிக்கப்படுகிறது. அதன்படி தமிழக கிழக்கு கடற்கரை பகுதிகளில் வருகிற 15–ந்தேதி முதல் அடுத்த மாதம் (மே மாதம்) 30–ந்தேதி வரை 45 நாட்களுக்கு இந்த ஆண்டு மீன்பிடிக்க தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது.

பழுது பார்க்கும் பணி

கன்னியாகுமரி, தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், ராமேஸ்வரம் என்று திருவள்ளூர் வரை விசைப்படகு மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க செல்ல

மாட்டார்கள். மேலும் இந்த காலங்களில் மீனவர்கள் தங்கள் படகுகளை பழுது பார்த்தல், வலைகளை சீரமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவார்கள்.

குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தை தங்கு தளமாக கொண்டு சுமார் 350–க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன்பிடித்து வருகிறார்கள். இந்த மீனவர்கள் மீன்பிடி தடைக்காலத்தையொட்டி தங்கள் படகுகளை பழுது பார்க்க இப்போதே ஏற்பாடுகளை செய்ய தொடங்கி விட்டனர். மீன்பிடி தடைக்காலங்களில் மீனவர்கள் வாழ்வாதாரத்திற்காக அவர்கள் குடும்பத்திற்கு ரூ.4 ஆயிரம் வீதம், தமிழக அரசு சார்பில் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது.

**குளம்போல் காட்சி அளிக்கும் பாபநாசம் அணை**



நெல்லை மாவட்டத்தில் பெரிய அணையான பாபநாசம் அணை 143 அடி தண்ணீர் கொள்ளளவு கொண்டது. தற்போது கோடை காலமாக இருப்பதால் அணை நீர்மட்டம் மளமளவென குறைந்து நேற்று காலை 8 மணியளவில் 43 அடியாக இருந்தது. தண்ணீர் இருப்பு குறைந்ததால் பாசனத்துக்காக நீர் திறந்து விடப்படவில்லை. குடிநீருக்காக மட்டும் வினாடிக்கு 200 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

கடல் போல் காணப்படும் பாபநாசம் அணையில் தண்ணீர் குறைந்ததால் நேற்று குளம்போல் காட்சி அளித்ததை படத்தில் காணலாம்.

**குமரி மாவட்டத்தில் கோடையை குளிர்வித்த மழை குளச்சல் பகுதியில் 22 மி.மீ. மழை பதிவு**



**நாகர்கோவில்,**

குமரி மாவட்டத்தில் நேற்று கோடையை குளிர்விக்கும் வகையில் மழை பெய்தது. குளச்சல் பகுதியில் 22 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

திடீர் மழை

குமரி மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்தே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. நாள் ஆக, ஆக வெயிலின் உக்கிரம் அதிகரித்ததே தவிர, குறைந்தபாடில்லை.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் லேசான மழை இருந்தது. நேற்று காலை சுமார் 6.30 மணி அளவில் நாகர்கோவில் நகரின் சில பகுதிகளில் திடீரென லேசான தூறல் காணப்பட்டது. காலை சுமார் 10.30 மணி வரையில் நாகர்கோவில் நகரப்பகுதியில் வானம் மப்பும், மந்தாரமுமாகவும், வெயில் முகத்தை காண முடியாத வகையில் மலைப்பிரதேச சீதோஷ்ண நிலையுடன் காட்சி அளித்தது. மாவட்டத்தின் சில பகுதிகளில் காலையில் இருந்து மதியம் வரை வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது.

மார்த்தாண்டம், கொல்லங்கோடு சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று பிற்பகலில் சாரல் மழை பெய்தது.

<u>இதமான மகிழ்ச்சி</u>

குமரி மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்) வருமாறு:–

பெருஞ்சாணி– 10.6, பூதப்பாண்டி– 4.5, சுருளோடு– 10, கன்னிமார்– 15.2, ஆரல்வாய்மொழி– 0.8, புத்தன்அணை– 10.8, குளச்சல்– 22 என்ற அளவில் மழை பதிவாகியிருந்தது. கோடை வெயிலில் வாடி, வதங்கி வந்த மக்களுக்கு இந்த திடீர் மழை இதமான மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.